Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, MARCH 20, 2024

புதன்கிழமை மார்ச் 20, 2024 | ஒளி: 09 கதிர் 216 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## நிறைவேற்று அதிகாரியின்

# “கைபொம்மை சபாநாயகர்”

### நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பித்து லக்ஷ்மன் கிரியெல்ல



நிதிக்குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியது சபாநாயகரின் கடமை. அதனை அவர் செய்யாமல் அரச தரப்பு உறுப்பினர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்தார். 3 வருடங்களாக இந்த பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கவில்லை. அதனால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய சபாநாயகரே பிரதான காரணம். சபாநாயகர் இன்று நிறைவேற்று அதிகாரியின் கைபொம்மையாகியுள்ளார் என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசுகையில்,

சபாநாயகராகத் தெரிவு செய்யப்படுபவர் அரசியல் நடவடிக்கைகள் பதவிகளிலிருந்து மீள வேண்டும். அப்போதுதான் சபாநாயகர் ஆசனத்தில் இருந்துகொண்டு இரு தரப்புக்கும் நியாயமாகச் செயற்பட முடியும். ஆனால், எமது சபாநாயகர் இந்த பதவிக்கு நியமிக்கப்பட்டதற்குப் பின்னர் அரசியல் தொடர்புகளில் இருந்து மீளவில்லை. அவர் இன்னும் வெலிமடை பிரதேச சபை ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவராக இருக்கிறார்.

தொடர்ச்சி P2

# ‘கோப்’ பில் இருந்து எழுவர் விலகினர்

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் தொடர்பான குழுவின் (கோப்) தலைவராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தக் குழுவிலிருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விலகிவருகின்றனர்.

இதன்படி செவ்வாய்க்கிழமை (19) வரையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த 7 பேர் கோப் குழுவிலிருந்து விலகியுள்ளனர்.

அந்தக் குழுவிலிருந்து கடந்த திங்கட்கிழமை ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் எரான் விக்கிரமரட்னபதவி விலகியதுடன், எதிரணி சுயாதீன எம்.பி தயாசிறி ஜயசேகர, சரித ஹேரத், ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி ஹேஷா விதானகே, நளீன் பண்டார, எஸ்.எம்.மரிக்கார் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோர் பதவி விலகியுள்ளனர்.

தொடர்ச்சி P2

# “சிங்கள, தமிழ் நீதியால் பிரச்சினை”



நாட்டில் தமிழருக்கு ஒரு நீதியும், சிங்களவருக்கு ஒரு நீதியுமே இருக்கின்றது என்றும் இதுவே பிரச்சினைகளுக்குக் காரணம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

வவுனியா வெடுக்குநாறிமலை, ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த 8ஆம் திகதி பூஜையில் ஈடுபட்டிருந்த 8 பேர் கைது செய்யப்பட்டமைக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) நடைபெற்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து சபையில் உரையாற்றுகையிலேயே சாணக்கியன் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், தொல்பொருள் திணைக்களத்தின் அடாவடியால் தமிழர்கள் தற்போது கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளனர். முறையான விசாரணையின் பின்னரே அவர்களை விடுதலை செய்ய முடியும் என்று நீதி அமைச்சர் கூறுகின்றார்.

தொடர்ச்சி P2



# ‘சோ’ தான் காட்டுகின்றனர்

“வெடுக்குநாறி, மாதவனை, குருந்தூர் எங்கள் சொத்து”, “பொலிஸ் அராஜகத்துக்கு முடிவு கட்டு”, என்ற கோஷங்களினால் சபை சிறிது நேரம் அதிர்ந்தது.

பாராளுமன்ற அமர்வு செவ்வாய்க்கிழமை (19) பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

அப்போது சபைக்கு நடுவே சுலோக அட்டைகளுடன் வந்த வடக்கு,கிழக்கு மற்றும் மலையக தமிழ் எம்.பிக்கள், வெடுக்குநாறி ஆதிலிங்கேஷ்வரர் ஆலயத்தின் சிவராத்திரி தினத்தன்று கைது செய்யப்பட்ட 8 பேரை விடுவிக்குமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2

# ரூ.10 கோடி பெறுமதியான தங்க நகைகள் சிக்கின

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 10 கோடி ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியான நகைகளுடன் டுபாயிலிருந்து வந்த இரு பயணிகளை இலங்கை சுங்க கண்காணிப்பு பிரிவினர் செவ்வாய்க்கிழமை (19) கைது செய்துள்ளனர் என சுங்க ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட சுங்க பணிப்பாளர் சிவலி அருங்கொட தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





## வெடுக்குநாறிமலை வழக்கு

# 8 பேரும் விடுதலை: வழக்கும் தள்ளுபடி

க. அகரன்

வெடுக்குநாறிமலை வழக்கில் கைது செய்யப்பட்ட 8 பேரும் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று (08) கைதுசெய்யப்பட்ட ஆலயபூசகர் உள்ளிட்ட 8 பேரும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் மார்ச் 19ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

தொடர்ச்சி P2

# “பக்கச்சார்பற்ற விசாரணை”



வவுனியா-வெடுக்குநாறிமலை, ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகாசிவராத்திரி தினத்தில் 8 பேர் கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ஆதரவாக களமிறங்கினார் சஜித்



வவுனியா- வெடுக்குநாறிமலை, ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகாசிவராத்திரி தினத்தில் பொலிஸாரின் அராஜகத்தைக் கண்டித்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்கு ஆதரவாக சபைக்கு நடுவே வந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சபாபீடத்தில் இருந்த பிரதி சபாநாயகருடன் கடும் வாதத்தில் ஈடுபட்டார்.

ஆர்ப்பாட்டத்தின் போது ஒழுங்கு பிரச்சினையை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்குமாறு கோரி வந்த போதும், சபாபீடத்தில் இருந்த பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ,

தொடர்ச்சி P2

# தமிழ் எம்.பிக்களின் எதிர்ப்பால் சபையில் பெரும் சலசலப்பு

வவுனியா- வெடுக்குநாறிமலை, ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகாசிவராத்திரி தினத்தன்று கைது செய்யப்பட்ட ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேரை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும் பொலிஸ் அராஜகத்தைக் கண்டித்தும் சபைக்கு நடுவே இறங்கிய தமிழ் எம்.பிக்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தினால் சுமார் அரை மணி நேரத்துக்கு மேலாக சபை நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களான எஸ்.சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன், சாணக்கியன் இராசமாணிக்கம், சார்ள்ஸ் நிர்மலநாதன், சித்தார்த்தன், விநோனோகராதலிங்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எம்.பி.யான செல்வராசா கஜேந்திரன், தமிழ் முற்போக்குக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம், இராதாகிருஷ்ணன், வேலுக்குமார் ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2



# பெண்களின் ஆரோக்கியத் துவாய் பிரச்சினைக்கு தீர்வை வழங்குங்கள்



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை

பெண்களின் ஆரோக்கியத் துவாய் சுகாதாரம், சமூக ஆரோக்கியம் குறித்த கலந்துரையாடல் மிகவும் உயர் மட்டத்தில் இருந்து வருகின்றன. என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இந்த பிரச்சினைக்குத் தீர்வை வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நிலையியற் கட்டளையின் பிரகாரம், விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எமது நாட்டின் சனத்தொகையில், 11 மில்லியன் பெண்கள் ஆவர். அவர்களில் சுமார் 2.5 மில்லியன் பேர் மாதாந்த நிதி செயல்முறையை எதிர்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “கைபொம்மை சபாநாயகர்”

இது அரசியல் நியமனம். ஜனாதிபதியே அந்த பதவியை வழங்குகிறார். அவ்வாறான நிலையில், சபாநாயகர் இந்த பதவியுடன் சபாநாயகர் ஆசனத்தில் இருக்கும்போது அவர் எடுக்கும் அனைத்து தீர்மானங்களுக்கும் பின்னால் அரசியல்தான் உள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் 3 வருடங்களாக அந்தக் குழுவைச் சபாநாயகர் நியமிக்காமல் இருந்தார். அதேபோன்று, அரச நிதிக்குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கவேண்டும் என நிலையியற் கட்டளையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி நிதிக்குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியது சபாநாயகரின் கடமை. அதனை அவர் செய்யாமல் அரச தரப்பு உறுப்பினர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்தார். 3 வருடங்களாக இந்த பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கவில்லை. அதனால், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய சபாநாயகரே பிரதான காரணமானவர்.

ஏனெனில் அன்று இந்த நிதிக்குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கி இருந்தால், நாடு வீழ்ச்சியடைவது தொடர்பாக முன்கூட்டியே தெரிவித்திருப்போம். ஆனால், நாடு வீழ்ச்சியடைவதை ஆளும் தரப்பு உறுப்பினர் மறைத்து வந்தார். அதனால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய சபாநாயகரே பிரதான காரணமாகவுள்ளார்.

தற்போது கோப் குழுவுக்குத் தலைவராக ஆளும் தரப்பு ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் மீது நம்பிக்கை இல்லாததால் அதன் உறுப்பினர்கள் தற்போது பதவி விலகி வருகின்றனர். சபாநாயகர் இன்று நிறைவேற்று அதிகாரியின் கைபொம்மையாகியுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அவர் தவறியுள்ளார்.

பிரதேச சபை தேர்தலை நடத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டபோது, அரசாங்கத்திடம் பணம் இல்லை என நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. என்றாலும், நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு சிறப்புரிமையை மீறும் நடவடிக்கை என ஆளும் தரப்பு உறுப்பினர் சபையில் தெரிவித்தபோது, சபாநாயகர், குறித்த தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளைப் பாராளுமன்றத்துக்கு அழைத்திருந்தார். இது நீதிமன்றத்தை அச்சுறுத்தும் நடவடிக்கை. இவ்வாறுதான் இந்த சபையை நாளுக்குநாள் சபாநாயகர் பாதாளத்துக்குக் கொண்டு செல்கின்றார்.

இவ்வாறு சபாநாயகர் தொடர்ந்து அரசாங்கத்துக்குச் சார்பாகச் செயற்பட்டு வருவதால் அவர் மீதான நம்பகத்தன்மை இல்லாமல் போயுள்ளது என்றார்.

# ‘கோப்’ பில் இருந்து எழுவர் விலகினர்

தமது பதவி விலகல் தொடர்பில் தயாசிறி ஜயசேகர, ஹேஷா விதானகே, சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோர் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் செவ்வாய்க்கிழமை (19) செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தி அறிவித்தனர்.

இதன்போது உரையாற்றிய தயாசிறி ஜயசேகர மற்றும் ஹேஷா விதானகே ஆகியோர் கூறுகையில்,

தற்போது கோப் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ரோஹித அபேகுணவர்தனவை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளமையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் தலைமை வகிக்கும் குழுவில் நாங்கள் உறுப்பினர்களாக இருக்க முடியாது. ஊழல் மோசடி குற்றச்சாட்டு வழக்குகளுடன் ஏற்கெனவே அவர் தொடர்புபட்டவர். அவ்வாறான நபரை வைத்துக்கொண்டு அரச நிறுவனங்களின் நிதி பயன்பாடு தொடர்பில் ஆராய்வது பொருத்தமற்றது. இதனால் நாங்கள் அந்த குழுவிலிருந்து விலக முடிவு செய்துள்ளோம் என்றனர்.

இதேவேளை, சாணக்கியன் இராசமாணிக்கம் அந்த செய்தியாளர் சந்திப்பில் கூறுகையில்,

நான் கோப் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு புதிய தலைவருக்கு எதிர்ப்பு வெளியிட்டு பதவி விலகுவதாக அறிவித்துவிட்டே வந்தேன். குழுவின் தலைவர் என்னைப் பாராளுமன்றத்திற்குள் தாக்கவந்தவர். நாங்கள் ராஜபக்ஷக்களின் மோசடிகளை வெளிக்கொண்டுவர முயற்சிக்கும் போது, தலைவராக இவர் இருக்கையில் அவ்வாறு வெளிப்படுத்த முடியாது. மோசடிகளை மறைக்கும் குழுவாகவே இருக்கும். இதனால் இந்த குழுவில் நாங்கள் தொடர்ந்தும் இருப்பது பிரச்சினையானது. இதனால் விலக முடிவு செய்தோம் என்றார்.

# ‘சோ’ தான் காட்டுகின்றனர்

இதன்போது, “பொலிஸ் அராஜகம் ஒழிக, அமைச்சர் விதுர விக்ரமநாயக்க பதவி விலக வேண்டும். வெடுக்குநாறிமலை எங்கள் சொத்து, மாதவனை எங்கள் சொத்து, குருந்தூர்மலை எங்கள் சொத்து, பொலிஸ் அராஜகத்துக்கு முடிவு கட்டு, பொய் வழக்கை வாபஸ் பெறு, அப்பாவிகளை விடுதலை செய்” என கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இதற்கு சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, “உங்களின் எதிர்ப்புக்களை வெளிப்படுத்தி விட்டு ஆசனங்களுக்குச் செல்லுங்கள்” என்று குறிப்பிட்டு விட்டு சபை நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

இதன்போது எதிர்க்கட்சி எம்.பியான ஹர்ஷ டி சில்வா, “தயவு செய்து சபையைக் கட்டுப்படுத்துங்கள்” என பிரதி சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

“சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர், சபை நடுவில் வந்து போராட்டத்தில் ஈடுபடுவதால் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது. இவர்கள் முன்வைத்த விடயத்தை உரியத் தரப்பினருக்கு அறிவிப்பதாக நான் குறிப்பிட்டேன். அதனைக் கருத்திற் கொள்ளாமல் போராட்டத்தில் ஈடுபட்டால் என்ன செய்வது” என்றார்.

இதன்போது பொலிஸ் மா அதிபரைப் பாராளுமன்றத்துக்கு அழைத்து விசாரணை செய்யுங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். இதற்குப் பதிலளித்த சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர், “நீங்கள் குறிப்பிடுவதைப் போன்று பொலிஸ் மா அதிபரை அழைக்க முடியாது” என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய அரச தரப்பின் பிரதம கொறடாவான பிரசன்ன ரணதுங்க, “வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் பிரதிநிதிகளுக்குப் பிரச்சினைகளுக்கு காணப்படுமாக இருந்தால் அவர்கள் ஆசனங்கள் இருந்தவாறு அவற்றைக் குறிப்பிடலாம். எதிர்க்கட்சித் தலைவர் இவர்களுடன் ஒன்றிணைந்து ‘சோ’ காட்டுகிறார். இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டாம்” என்றார்.

சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர், “பெரும்பாலானோர் ‘சோ’ தான் காட்டுகிறார்கள்” என்றார்.

# 8 பேரும் விடுதலை: வழக்கும் தள்ளுபடி

இதனையடுத்து, அவர்கள் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில் அது தொடர்பான வழக்கு, செவ்வாய்க்கிழமை (19) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த 8 பேரையும் வழக்கிலிருந்து விடுதலை செய்த நீதிபதி வழக்கினையும் தள்ளுபடி செய்தார்.

குறித்த வழக்கில் ஆலயநிர்வாகம் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணிகளான என்.சிறிகாந்தா,அன்ரன் புனிதநாயகம்,திருஅருள், க.சுகாஸ், தலைமையில் பல சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர்.

# “பக்கச்சார்பற்ற விசாரணை”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் பதிலளிக்கையிலேயே நீதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது பதிலளித்த நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ மேலும் கூறுகையில்,

8 பேர் கைது செய்யப்பட்ட விடயம் நீதிமன்றத்தில் உள்ள விடயம். எனினும் அந்த கைது தொடர்பில் ஏதேனும் தவறுகள் இடம்பெற்றிருந்தால் அது தொடர்பில் சுயாதீனமாக பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்தி அது தொடர்பில் நீதிமன்றத்திற்கு எங்களால் அறிவிக்க முடியும். அதன்படி நீதிமன்றம் நீதியை நிலைநாட்டும். நீங்கள் சட்டவாட்சியை பாதுகாக்குமாறு கூறிக்கொண்டு, குற்றவாளிகளை விடுதலை செய்யுமாறு கோருகின்றனர். அப்படி செய்தால் சட்டவாட்சி பாதுகாக்கப்படுமா? எவ்வாறாயினும் பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்தி நீதிமன்றத்திற்கு எங்களால் அறிவிக்க முடியும் என்றார்.

# தமிழ் எம்.பிக்களின் எதிர்ப்பால் சபையில் பெரும் சலசலப்பு

இவர்களுக்கு ஆதரவாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் எதிர்க்கட்சி பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோரும் குரல் கொடுத்ததுடன், சஜித் பிரேமதாச, தமிழ் எம்.பிக்களுடன் சபைக்கு நடுவில் இறங்கியும் குரல் கொடுத்தார்.

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (19) காலை 9.30 மணிக்குப் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடியபோது, சபாநாயகர் அறிவிப்பு மற்றும் மனுக்கள் சமர்ப்பணங்கள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருந்தபோது திடீரென தமிழ் கட்சிகளின் எம்.பிக்கள் சபைக்கு நடுவே இறங்கினர்.

வெடுக்குநாறிமலை ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேரை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும், பொலிஸ் அராஜகத்தை கண்டித்தும் பதாகைகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அவர்களுக்கு ஆதரவாக சஜித், எதிர்க்கட்சி பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோரும் சபைக்கு நடுவே இறங்கினர்.

இவ்வேளையில், ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களைச் சபை நடவடிக்கைகளைத் தொடர இடமளித்து அமைதியாக இருக்குமாறு, பிரதி சபாநாயகர் தொடர்ச்சியாக அறிவித்த போதும் அவர்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் கோஷங்களை எழுப்பினர். இதனால் சபை நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டதுடன், சபையில் கடும் அமைதியின்மையும் ஏற்பட்டது.

இதன்போது ஆளும் கட்சி எம்.பிக்கள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ் எம்.பிக்களுடன் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டதுடன், அவர்களை தமது இடங்களுக்குச் சென்று அமருமாறு வலியுறுத்தினர். எனினும், தமது கோரிக்கை தொடர்பில் பிரதி சபாநாயகர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தினர்.

ஆனால், பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, தினப் பணிகளைத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுத்தபோது, சபைக்கு நடுவே வந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித், பிரதி சபாநாயகருடன் கடும் வாதத்தில் ஈடுபட்டார். “தயவு செய்து இவர்களின் கோரிக்கைகளுக்குச் செவி சாயுங்கள். இறைவழிபாட்டு உரிமையை மதிக்க வேண்டும்” என்று பிரதி சபாநாயகரிடம் அவர் வலியுறுத்தினார்.

இதன்போது பிரதமர், நீதி அமைச்சர் ஆகியோர் இந்த விடயம் தொடர்பில் தமது கருத்துக்களைப் பதிவு செய்ததுடன், ஆளும் மற்றும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் சிலரும் ஒழுங்கு பிரச்சினைகளை எழுப்பி தமது கருத்துக்களை முன்வைத்தனர். இதனால் சபையில் 30 நிமிடங்களாக அமைதியின்மை நிலவியது. பின்னர் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, இந்த குறித்த கைதுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதாக உறுதியளித்ததை தொடர்ந்து, போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் எம்.பிக்கள் தமது ஆசனங்களுக்குச் சென்று அமர்ந்த நிலையில் சபை வழமைக்குத் திரும்பியது.

# ஆதரவாக களமிறங்கினார் சஜித்

தினப் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முயன்றபோதே எதிர்க்கட்சித் தலைவர் சபைக்கு நடுவே வந்து பிரதி சபாநாயகருடன் வாதத்தில் ஈடுபட்டார்.

முதலில் ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் கூறுகையில்,

இந்த நாட்டில் அடிப்படை உரிமை, மனித உரிமை உள்ளது. தமது மதத்தைப் பின்பற்றும் உரிமை அனைவருக்கும் உள்ளது. ஆலயத்திற்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்கள் என்பதற்காக எவரையும் கைது செய்ய முடியாது. இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டின் மதச் சுதந்திரம் வடக்கிற்கும், தெற்கிற்கும் ஒன்றாகவே இருக்க வேண்டும் என்றார்.

இதன்பின்னர் சபைக்கு நடுவே வந்த எதிர்க்கட்சித் தலைவர், பிரதி சபாநாயகர் தயவு செய்து நீங்கள் இவர்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாயுங்கள். இந்த நாட்டில் மதச் சுதந்திரம் உள்ளது. பொலிஸ்மா அதிபரை அழைத்து இதனைக் கூறுங்கள் என்றார்.

இவ்வேளையில் எதிர்க்கட்சித் தலைவருக்குப் பதிலளித்த பிரதி சபாநாயகர், முதலில் உங்கள் கோரிக்கைகளை உங்களின் இடங்களுக்குச் சென்று கூறுங்கள். அவர்களுக்கு நான் பதிலளித்துள்ளேன். தேடிப்பார்த்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறியுள்ளேன். நீங்கள் கூறுவதைப்போன்று பொலிஸ் மா அதிபரை இங்கே அழைக்க முடியாது என்றார்.

இதனைத் தொடர்ந்து ஆளும் கட்சி பிரதம கொரடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகையில், கோரிக்கைகளை உங்களின் இடத்திற்குச் சென்று கூறுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் இங்கே வந்து கண்காட்சியை நடத்துகின்றார். காலத்தை வீணடிக்க வேண்டாம் என்று கோருகின்றேன் என்றார்.

இதனையடுத்து, நீதி அமைச்சரின் பதிலைத் தொடர்ந்து தனது கருத்தை மீண்டும் முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் இனம், மதம் என எவ்வித பேதமும் இன்றி நாம் அனைவரும் மதச் சுதந்திரம் தொடர்பில் சிந்திக்க வேண்டும். இங்கே கோயில், விகாரை, பள்ளி ஆகியவற்றுக்கு அந்தந்த மதங்களைச் சேர்ந்தவர்களுக்குச் சென்று வழிபடும் உரிமை உள்ளது. குறிப்பாக இந்த பாராளுமன்றத்தில் 225 பேரும் மதச் சுதந்திரத்தைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளனர். அத்துடன் குறித்த விடயம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்துமாறு நாம் நீதி அமைச்சரிடம் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

இதேவேளை எதிர்க்கட்சி பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகையில், ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபடும் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தவறாகும் என்று தெரிவித்தார்.

# ரூ.10 கோடி பெறுமதியான தங்க நகைகள் சிக்கின

மதுபான போத்தல்களை அகற்றி வெளிநாட்டு மதுபான போத்தல்கள் போன்று தோற்றமளிக்கும் வகையில் பெட்டிகளில் பொதியிட்டு விமான நிலையத்திற்கு வெளியே எடுத்துச் செல்ல முற்பட்ட போதே குறித்த நகைகள் கைப்பற்றப்பட்டதாக அருங்கொட தெரிவித்தார்.

மேலும், இரண்டு பயணிகளும் அம்பலாங்கொடை மற்றும் யாழ்ப்பாணம் பிரதேசங்களை வசிப்பவர்கள் என்றும் தெரிவித்த அருங்கொட, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.



# பெண்களின் ஆரோக்கியத் துவாய்...

இறக்குமதி செய்யப்படும் ஆரோக்கியத் துவாய் மீதான அதிக வரி விதிப்பும், உள்நாட்டில் தயாரிக்கப்படும் ஆரோக்கியத் துவாய் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் மீதான வரி விதிப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளதால், இவை விலையுயர்ந்த ஆடம்பரப் பொருளாக மாற்றியுள்ளது.

ஒரு குடும்பத்தின் மாத வருமானத்தில் சுமார் 3.5% ஆரோக்கியத் துவாய்களுக்காக செலவிடப்படுகிறது. ஆரோக்கியத் துவாய்களின் விலைகள் அதிகம் என்பதால், குறைந்தபட்ச வாழ்க்கைத் தரம் உள்ள குடும்பங்களில் உள்ள பெண்கள் ஆரோக்கியமற்ற முறைகளை இதற்காக பயன்படுத்துவதை நிறுத்தி, பொருளாதார வறுமையை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான மோசமான சுகாதார முகாமைத்துவத்தினால் சிறுநீரக தொற்று மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் நிலைமைகள் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இறக்குமதி செய்யப்படும் ஆரோக்கியத் துவாய்களுக்கு அதிக வரி விதிக்கப்பட்டதால் அவற்றின் விலை அதிகரித்துள்ளன. ஆரோக்கியத் துவாய்களுக்கு விதிக்கப்பட்ட வரியை நீக்குவது எப்போது? என்றும் கேள்வியெழுப்பினார்.

மேலும், பெண்களுக்கு இலவச ஆரோக்கியத் துவாய் வழங்குவதை ஐக்கிய மக்கள் சக்தி கொள்கையாகக் கருதினாலும், தற்போதைய அரசாங்கம், 2019 ஜனாதிபதித் தேர்தலின் போது அதனைக் கேலி செய்து, நற்பெயருக்கு களங்கம் விளைவித்து,சேறு பூசும் விதமாகப் பேசினாலும் இன்று அது பாரியதொரு பிரச்சினையாக மாறியிருக்கிறது. எனவே இதற்குத் தீர்வு வேண்டும்.

இது தொடர்பான பாடங்கள் தடைசெய்யப்பட்ட பாடமாக இனுமேலும் இருக்கக்கூடாது. சமூகத்தில் இது தொடர்பான ஒரு உரையாடலை உருவாக்க வேண்டும். கல்வி பாடத்திட்டத்திலும் இவ விவகாரம் உள்ளடக்கப்பட வேண்டும். சமூகத்திலும் இது குறித்த விடயதானங்களை பேசுபொருளாக்க வேண்டும். இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை என்பதால், இது குறித்து வெளிப்படையாகப் பேசி, நிலையான தீர்வைக் காண வேண்டும். அபிவிருத்தியடைந்த முற்போக்கு சமூகங்கள் இவ்வாறான பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகளைக் கொண்டிருந்தாலும் வளர்முக சமூகங்கள் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முட்டாள்தனமான தீர்வுகளை முன்வைத்து வருகின்றது.

இறக்குமதி செய்யப்படும் ஆரோக்கியத் துவாய்களுக்கு 40% வரி செலுத்த வேண்டியுள்ளது. VAT,PAL, SSCL மற்றும் Cess போன்ற 4 வரிகள் உள்ளன. 15 முதல் 49 வயதுடைய பெண்கள் எதிர்கொள்ளும் இந்தப் பிரச்சினைக்கு உகந்த தீர்வு வழங்கப்பட வேண்டும். Selyn அறக்கட்டளை இந்த பிரச்சினைக்கு ஒரு சிறந்த ஆய்வை முன்னெடுத்து ஒரு நிலையான தீர்வையும் எட்டியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# “சிங்கள, தமிழ் நீதியால் பிரச்சினை”



ஆனால், இதே தொல்பொருள் திணைக்களத்திற்குச் சொந்தமான குருந்தூர்மலை போன்ற இடத்தில் பௌத்த பிக்குகள் நடந்துகொண்டமைக்கு எதிராகத் தொல்பொருள் அமைச்சரால் இதுவரையில் எந்தவித நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

ஆகவே இந்த நாட்டில் தமிழருக்கு ஒருநீதி, சிங்களவருக்கு ஒருநீதி என்றே இருக்கின்றது. இதுவே நாட்டின் அடிப்படை பிரச்சினையாகும். விசாரணை செய்துதான் விடுதலை செய்ய முடியுமென்றால், ஏன் இன்னும் பிக்குகளை கைது செய்யவில்லை என்றார்.

## அன்னை பூபதியின் 36ஆவது நினைவு தினம்



உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் 36ஆவது நினைவு தினம் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் புதன்கிழமை (19) அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

# பல்கலைக்கழக ஊழியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்






**எம்.எஸ்.எம்.ஹனீபா**

தென்கிழக்கு பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஒரு நாள் அடையாள பணிப்பகிஷ்கரிப்பிலும், கவனயீர்ப்பு போராட்டத்திலும் பல்கலைக்கழக ஒலுவில் வளாக பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக செவ்வாய்க்கிழமை (19) ஈடுபட்டுள்ளனர்.

“அரசாங்கத்தினால் பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி குறைப்பு”, “மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு அரசாங்கம் போதிய நடவடிக்கை எடுக்காமை“, “பல்கலைக்கழக ஊழியர்களுக்கு நீண்டகாலமாக வழங்கப்படாதுள்ள சம்பள அதிகரிப்பை வழங்கக் கோருதல்” போன்ற பிரதான கோரிக்கைகளை முன்வைத்தே இப்போராட்டம் இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் முன்னெடுக்கப்பட்டதாக, தென்கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரீ.எம்.தாஜுதீன் தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக இருந்து வரும் எமது கோரிக்கைகளுக்கு சம்மந்தப்பட்ட தரப்பினர்களால் தீர்வுகள் வழங்கப்படாமல் நீடிக்குமானால், மேலும் அழுத்தம் கொடுக்கும் வகையில் எதிர்காலத்தில் தொடர்ச்சியான பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



## மீனவர்கள் உண்ணாவிரதம்

**நிதர்ஷன் வினோத்**

யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனமும், யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து செவ்வாய்க்கிழமை (19) உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மருதடி சந்தியில் இருந்து பேரணியாக யாழ். இந்தியத் துணைத் தூதரகம் நோக்கிச் சென்ற மீனவர்கள் துணைத் தூதரகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, அவர்களை பொலிஸார் அங்கிருந்து வெளியேற்றியதை அடுத்து யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்துக்கு முன்பாக தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.



## சமுர்த்தி பணிப்பாளராக கடமையேற்பு

அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளராக அட்டாளைச்சேனை பிரதேச செயலக முன்னாள் செயலாளர் எம்.ஏ.சி.அகமட் ஸாபீர் செவ்வாய்க்கிழமை (19) கடமையேற்றுள்ளார். இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர்.

-அபு அலா



## சாயி பாபாவின் 8ஆவது ஆண்டு ஆரம்ப விழா



கொழும்பு–கொட்டாஞ்சேனை ஶ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம், ஐங்கரன் மண்டபத்தில் அமைந்துள்ள சாயி நாதனின் சரணாலயத்தில், சாயி பாபாவின் 8ஆவது ஆண்டு ஆரம்ப விழா நடைபெற்றுள்ளது. இதில் தமிழகத்திலிருந்து வருகை தந்த சிறப்பு பேச்சாளர் பிரசாத் கணேஷின் (கோபுரம் TV) சிறப்பு சொற்பொழிவும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியையை வெட்டிய ஆசிரியை கைது

பாடசாலை ஆசிரியை ஒருவரை கத்தியால் வெட்டி காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் மற்றுமொரு பாடசாலை ஆசிரியை கடந்த 19ஆம் திகதி கைது செய்யப்பட்டதாக பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த 44 வயதுடைய ஆசிரியை பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவரது கால் மற்றும் கைகளில் வெட்டுக்காயங்கள் உள்ளது எனவும் பதுளை போதனா வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் கூறியுள்ளார்.

சந்தேகத்திற்குரிய 45 வயதுடைய ஆசிரியையிடம் இருந்து கத்தி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்விரு ஆசிரியைகளும் இரு பாடசாலைகளில் பணியாற்றும் நண்பிகள் எனவும், இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக சந்தேகநபர் கடந்த 18ஆம் திகதி அவரது வீட்டுக்குச் சென்று இவ்வாறு குற்றம் புரிந்துள்ளதாக அறியமுடிகின்றது.

இதனையடுத்து, பிரதேசவாசிகள் சந்தேக நபரை பிடித்து 119 என்ற பொலிஸ் அவசர இலக்கத்திற்கு அறிவித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் தனிப்பட்ட பிரச்சினையே இந்த குற்றத்திற்கு காரணம் எனவும் தெரியவந்துள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனத்தில் ஏற்றிச்சென்று

## பெண் பாலியல் வன்புணர்வு

கொழும்பில் இருந்து பஸ்ஸொன்றில் அனுப்பப்பட்ட பொதியைப் பெறுவதற்காகக் காத்திருந்த பெண்ணொருவரை, கெப்ரக வாகனத்தில் ஏற்றிச்சென்று பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திவிட்டு, அப்பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ள சம்பவம் மொனராகலையில் இடம்பெற்றுள்ளது.

மொனராகலை-தொம்பஹாவெல பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞன், திங்கட்கிழமை (18) கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட 36 வயதான பெண், கொழும்பில் இருந்து பஸ்ஸில் அனுப்பப்பட்ட பொதியைப் பெற்றுக்கொள்வதற்காக அன்றையதினம் இரவு 9 மணியளவில் வீதியில் சென்று கொண்டிருந்துள்ளார்.

அப்போது அப்பெண்ணுக்கு அருகில் கெப்ரக வாகன மொன்று வந்து நின்றுள்ளது. அந்த கெப்ரக வாகனத்தின் சாரதி, எங்கே போகின்றீர்கள் என அப்பெண்ணிடம் வினவியுள்ளார். தொம்பஹாவெல நகருக்குச் செல்வதாக அப்பெண் பதிலளிக்கவே, தானும் நகருக்குத்தான் செல்கின்றேன் எனக்கூறி, அப்பெண்ணை வாகனத்தின் முன்பக்க இருக்கையில் ஏற்றிக்கொண்டுள்ளார்.

வாகனத்தை நகரத்தில் நிறுத்தாமல், கொஞ்சம் முன் சென்று, பாழடைந்த குறுக்கு வீதியில் நிறுத்தி, அப்பெண்ணை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். அதன் பின்னர், அதே கெப்ரக வாகனத்தில் அப்பெண்ணை ஏற்றிக்கொண்டு நகரத்துக்கு வந்து இறக்கி விட்டு, அப்பெண்ணின் கழுத்தில் இருந்த தங்க சங்கிலியையும் அபகரித்துச் சென்று விட்டார். சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே, கெப்ரக வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## காணி உரிமை பத்திரம் வழங்கி வைப்பு



அம்பாறை மாவட்டம்- திருக்கோவில் பிரதேச பொதுமக்களுக்கு காணி உரிமை பத்திரம் வழங்கும் நிகழ்வானது, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் முன்னிலையில் இடம்பெற்றுள்ளது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் தலைமையில், பிரதேச செயலகத்தில் திங்கட்கிழமை (18) நடைபெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கலந்து கொண்டுள்ளதுடன், 100 பேருக்குக் காணி உரிமை பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.



- வி.ரி.சகாதேவராஜா



## ஜப்பானிய தூதுவருடன் அனுரகுமார சந்திப்பு

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று பெலவத்தையில் உள்ள ஜே.வி.பியின் தலைமை அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (19) இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நிலவரங்கள் குறித்து இரு தரப்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

மேலும், இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஜப்பான் தயாராக இருப்பதை ஜப்பானிய பிரதிநிதிகள் வலியுறுத்தியதாக தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பில் ஜப்பானிய தூதரகத்தின் பிரதித் தலைவர் கட்சுகி கோட்டாரோ மற்றும் இரண்டாவது செயலாளர் இமாய் கௌரி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினரான பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரூபாயின் மதிப்பு வேண்டுமென்றே குறைக்கப்படுகின்றதா?

தொடர்ச்சியாக ஒரு மாத காலமாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு குறைவடைந்து வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. தினசரி இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் உத்தியோகபூர்வ நாணயமாற்று விகித அறிவித்தலின் படி, செவ்வாய்க்கிழமை (19) தரவுகளின் பிரகாரம், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் கொள்முதல் பெறுமதி ரூ.299.29 ஆகக் காணப்பட்டது.

இந்தப் பெறுமதி ஒரு மாத காலப்பகுதிக்கு முன்னர் சுமார் 322-325 ரூபாய்களுக்கு இடைப்பட்டதாகக் காணப்பட்டது. இவ்வாறு ரூபாயின் மதிப்பு தொடர்ந்தும் உயர்வடைவது தொடர்பில் பொது மக்கள் மத்தியில் தெளிவற்ற ஒரு மனநிலை காணப்படுவது புலனாகின்றது. பொதுவில் சந்தையில் மிகையாகக் காணப்படும் டொலர்களை இலங்கை மத்திய வங்கி கொள்வனவு செய்து, தனது இருப்பை அதிகரித்துக் கொள்ளும். அத்துடன், நாட்டில் இறக்குமதி வீழ்ச்சி ஏற்பட்டு, டொலர்களுக்கான கேள்வி குறைவடைந்திருக்கும். சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துக் காணப்படுவதால், நாட்டினுள் டொலர் வரத்து அதிகரித்திருக்கும் போன்ற பல்வேறு காரணிகள் முன்வைக்கப்படலாம்.

எவ்வாறாயினும், தேர்தல் தொடர்பில் பரவலாகப் பேசப்படும் நிலையில், அதை இலக்காகக் கொண்டு இந்த ரூபாய் மதிப்பு உயர்வு நடவடிக்கை திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றதா என்ற எண்ணமும் மக்கள் மத்தியில் இல்லாமல் இல்லை.

குறிப்பாக, அண்மைய வாரங்களில் பரவலாகப் பேசப்பட்ட, மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பான விடயத்தைத் தொடர்ந்து, மத்திய வங்கியின் ஆளுநர் அடங்கலாக, மத்திய வங்கியின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையில் ஒருவிதமான பின்னடைவு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அந்த பிரச்சினையைச் சீர் செய்யும் வகையில், அரசாங்கத்துக்கு அதன் பிரபல்யத் தன்மையை அதிகரிக்கச் செய்யும் வகையில் இந்த நடவடிக்கை மத்திய வங்கியினால் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் பொது மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய ஒரு கட்டாயத்திலுள்ளார். குறிப்பாக தேர்தல் காலம் என்பதால், அடுத்தமாதம் வரவுள்ள பண்டிகைகளை பொது மக்கள் கொண்டாடுவதற்கு வழிவகை செய்யும் வகையில், இந்த நகர்வு மேற்கொள்ளப்படுகின்றதா அல்லது இந்த பெறுமதி உயர்வு உண்மையில் நிலைபேறானதா? தேர்தலின் பின்னர் கடந்த காலங்களைப் போன்று, டொலரின் பெறுமதி சடுதியாக 400 ரூபாயை தொட்டுவிடுமா போன்ற கேள்விகளும் இல்லாமல் இல்லை.

அத்துடன், வெளிநாட்டுக் கடன்கள் மீளச் செலுத்துவது இன்னமும் ஆரம்பிக்கப்படாத நிலையில், அவற்றை செலுத்த ஆரம்பிக்கையில், இந்தப் பெறுமதிக்கு என்ன நடக்கும் போன்ற தெளிவுபடுத்தல்களை மக்களுக்கு வழங்க வேண்டிய மத்திய வங்கியின் பொறுப்பிலுள்ள அதிகாரிகளின் கடமையாகும்.

அத்துடன், ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட பெறுமதி சேர் வரி மீண்டும் அடுத்த மாதம் முதல் 15 வீதமாக குறைக்கப்படவுள்ளமை தொடர்பிலும் அரசாங்க தரப்பிலிருந்து தகவல்கள் வெளியிடப்படுகின்றன. இவ்வாறான தீர்மானம் தொடர்பிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெளிவுபடுத்த வேண்டியது கட்டாயமானதாகும். தேர்தல் கண்துடைப்பாக இருந்துவிடக்கூடாது, மக்கள் முன்னரை விட தற்போது அதிகம் தெளிந்துள்ளமையை அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# சட்டத்தின் ஆட்சி எங்கே?



எம்.எஸ்.எம். ஐயூப்

சட்டத்தின் ஆட்சியே ஜனநாயகத்தின் அடிக்கல் என்பார்கள். அதாவது, ஜனநாயகத்தின் கீழ் ஆட்சியாளர்களின் விருப்பத்துக்கு ஏற்ப அல்லாது சட்டத்துக்கு ஏற்ப நாட்டில் சகல காரியங்களும் நடைபெறவேண்டும் என்பதாகும். ஆயினும், இலங்கையில் இந்த விதி பட்டப் பகல் மீறப்படுகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பாவுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அதாவது நிகழ்நிலை காப்புச் சட்டத்தை நிறைவேற்றும் விடயத்தில் சபாநாயகர் சட்டப்படி நடந்து கொள்ளவில்லை என்ற அடிப்படையிலேயே இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

அரசாங்கம் கடந்த செப்டெம்பர் மாதமே சர்வதேச ரீதியாகவும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட இந்த நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. அதன் மூலம் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் வெகுவாக பாதிக்கப்படுகிறது என்ற அடிப்படையில் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் 45 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அவற்றின் மீதான விசாரணையின் தீர்ப்பு நவம்பர் மாதம் 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன் படி சட்டமூலத்தின் 31 வாசகங்கள் அரசியலமைப்புக்கு முரணானவை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்து இருந்தது. அவ்வாசகங்கள் நீதிமன்றத்தின் வழிகாட்டலின் பிரகாரம் திருத்தப்பட வேண்டும், அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் தமது தீர்ப்பில் குறிப்பிட்டு இருந்தது. அதன் பின்னர் அரசாங்கம் திருத்தப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. ஆனால், நீதிமன்றத்தின் உத்தரவு முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்றும் நீதிமன்றம் திருத்தப்பட வேண்டும் என்று விதித்த சில வாசகங்கள் திருத்தப்படவில்லை என்றும் எதிர்க்கட்சிகள் கூறின. ஆயினும் அரசாங்கம் அதனை பொருட்படுத்தாது தமது பெரும்பான்மை பலத்தை பாவித்து கடந்த ஜனவரி 23ஆம் திகதி சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொண்டது.

நிறைவேற்றப்பட்ட சட்டங்களுக்கு சபாநாயகரின் கையொப்பத்துடன், அனுமதி வழங்கப்பட்டால் மட்டுமே அவற்றை அமுலாக்க முடியும். எனவே, நீதிமன்றத்தின் கட்டளைப் படி திருத்தப்படாது. நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டத்துக்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டன. ஆனால், சபாநாயகர் அதனைப் புறக்கணித்து பெப்ரவரி முதலாம் திகதி சட்டத்துக்கு தமது அனுமதியை வழங்கினார்.

இதன் காரணமாகவே சுமந்திரன் சபாநாயகருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார். ஆனால், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமொன்று விடயத்தில் தலையிட நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்ற அடிப்படையில் நீதிமன்றம் அம்மனுவைத் தள்ளுபடி செய்தது. பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரத்தை நீதிமன்றத்தில் சவாலுக்குள்ளாக்க முடியாது என்பது மூத்த சட்டத்தரணியான சுமந்திரனுக்கு தெரியாதிருக்க முடியாது. அது தொடர்பாக முன் அனுபவமும் இருக்கிறது.

தமிழர்களுக்காகவே அறிமுகப் படுத்தப்பட்ட மாகாண சபைகள் இப்போது இயங்காத நிலையில் உள்ளன. 2017இல் அப்போதைய பிரதமர் ரணில் தலைமையில் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டத்தின் காரணமாகவே அந்த நிலை ஏற்பட்டது.

அச்சட்டம் முறையாக நிறைவேற்றப்பட வில்லை என்று அப்போது முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார். ஆனால், பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரத்தை நீதிமன்றத்தில் சவாலுக்குள்ளாக்க முடியாது என்று நீதிமன்றம் அதனை நிராகரித்திருந்தது. இதனையும் சுமந்திரனுக்கு தெரியாதிருக்க முடியாது. ஆயினும், அவரது மனு ஒருவித கவனயீர்ப்பு நடவடிக்கையாகவே அமைந்தது.

அரசியலமைப்புக்கு முரணாகாத முறையிலேயே புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அதற்காகவே புதிய சட்டங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படு முன் உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பப்படுகின்றன.

அவற்றைப் பற்றிய நீதிமன்றத்தின் பரிந்துரைகளை புறக்கணித்து சட்டங்கள் நிறைவேற்றப்படுமானால் அது சட்ட விரோதமானதாகும். ஆயினும் அவ்வாறு நீதிமன்ற பரிந்துரைகளைப் புறக்கணித்து சட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் நீதிமன்றத்தால் அதற்கு எதிராக எதையும் செய்ய முடியாது. எதிர்காலத்திலும் இவ்வாறு இடம்பெறலாம். அதனையே சுமந்திரன் தமது மனுவின் மூலம் பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

நிறைவேற்றப்பட்ட சட்டங்களை மீளாய்வு செய்யும் அதிகாரம் இலங்கையின் நீதிமன்றங்களுக்கு இல்லை. இவ்வாறு மீளாய்வு செய்வது 'Judicial review of legislations' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது. ஒரு அரசாங்கம் தமது பெரும்பான்மையைப் பாவித்து சட்ட விரோதமான அல்லது அடிப்படை உரிமைகளை மீறும் சட்டங்களை நிறைவேற்றிக் கொண்டால் அவற்றை பின்னொரு காலத்திலாவது திருத்த சாதாரண மக்களுக்கும் இந்த முறையின் கீழ் அவகாசம் கிடைக்கிறது.

இன்று, ஜனாதிபதி சட்டத்தை மதிக்காத நிலை உருவாகி இருக்கிறது. அந்த நிலையில் நீதிமன்றத்துக்கு அவ்வாறான அதிகாரம் இருப்பதே நல்லதாகும். நிகழ்நிலை காப்புச் சட்டம் ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் அவசியத்துக்காகவே கொண்டுவரப்பட்டுள்ளது. மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்களை அடக்குவதே அதன் நோக்கமாகும். புதிதாகக் கொண்டுவரப்பட இருக்கும் பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டத்தின் நோக்கம் அதுவேயாகும்.

தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த வருடம் மார்ச் மாதம் 9 ஆம் திகதியே உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்தத் திட்டமிட்டு இருந்தது. ஆனால், அதற்கு முன்னர் தேர்தல் திகதி நிர்ணயிக்கப்படுவதைத் தடுக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்.

அவரது ஐக்கிய தேசிய கட்சியும் ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் அத்தேர்தல்களில் படுதோல்வியடையும் நிலை காணக்கூடியதாக இருந்தமையே அதற்குக் காரணமாகும். தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலுக்கான திகதியை நிர்ணயித்த பின்னரும் அவர் அதனைத் தடுக்க பல்வேறு தந்திரங்களில் ஈடுபட்டார்.

அத்தேர்தல்களை இடைநிறுத்துமாறு கோரி ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றையும் தாக்கல் செய்தார். தேர்தலுக்கான தடைகளுக்கு எதிராகவும் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த நிலையில், வரவு-செலவுத் திட்டத்தால் தேர்தல்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியைத் தடுத்து வைத்திருக்கக் கூடாது என்று கடந்த வருடம் மார்ச் மாதம் 3ஆம் திகதி உயர் நீதிமன்றம் நிதி அமைச்சின் செயலாளருக்குக் கட்டளை பிறப்பித்தது.

ஆனால், அவர் அதன்படி நடந்து கொள்ளவில்லை. தேர்தலுக்குப் பணம் இல்லாததால் தேர்தல்களும் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு வந்தன. நீதிமன்ற உத்தரவைப் புறக்கணித்ததால் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன நீதிமன்றத்தை அவமதித்தார் என்று இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

நீதிமன்ற உத்தரவைத் தாம் நிதி அரசருக்கு அனுப்பியிருப்பதாகவும் அமைச்சர் இன்னமும் நிதி விநியோகத்துக்கான உத்தரவைப் பிறப்பிக்கவில்லை என்றும் சிறிவர்தன நீதிமன்றத்தில் கூறினார். அத்தோடு, எல்லாம் முடிவடைந்துவிட்டன. ஏனெனில் ஜனாதிபதியே நிதி அமைச்சராக இருக்கிறார். ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றம் சுயமாகச் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது. ஆனால் நீதிமன்ற கட்டளை மீறப்பட்டது.

ஜனாதிபதி குற்றமிழைத்தால் சட்ட மா அதிபருக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றின் மூலம் மட்டுமே பிரஜைகள் நீதி கோரலாம். ஆனால், இந்த விடயத்தில் எவரும் அவ்வாறான வழக்கொன்றைத் தாக்கல் செய்யவும் இல்லை.

அரசியலமைப்புச் சபையின் முடிவுகளைப் புறக்கணிப்பதன் மூலமும் அண்மையில் ஜனாதிபதி தாம் சட்டத்து அப்பாற்பட்டவர் என்று காட்டியுள்ளார். தேசபந்து தென்னகோனுக்கு முந்திய பொலிஸ் மா அதிபரான சந்தன விக்ரமரத்னவின் பதவிக் காலம் முடிவடைந்ததன் பின்னர் ஜனாதிபதி விக்ரமசிங்க அவருக்கு மூன்று மாதங்கள் வீதம் இரண்டு பதவி நீடிப்புக்களை வழங்கினார்.

அவ்வாறான நீடிப்புக்கள் அரசியலமைப்புச் சபையின் ஒப்புதலுடனேயே வழங்க வேண்டும். அரசியலமைப்புச் சபை இவ்விரண்டு பதவி நீடிப்புகளுக்கும் ஒப்புதல் வழங்கும் போது தொடர்ந்தும் இந்த பொலிஸ் மா அதிபருக்குப் பதவி நீடிப்புக்களை வழங்க முடியாது என்றும் ஜனாதிபதிக்குத் தெரிவித்தது. ஆனால், ஜனாதிபதி மூன்றாவது முறையாகவும் அவருக்குப் பதவி நீடிப்பு பரிந்துரைத்தார். அரசியலமைப்புச் சபை அதனை நிராகரித்தது. ஆனால், ஜனாதிபதி அதனைப் புறக்கணித்து பதவி நீடிப்பு வழங்கினார். எங்கே சட்டம்?

சந்தன விக்ரமரத்ன ஓய்வு பெற்ற பின் தேசபந்து தென்னகோனை பொலிஸ் மா அதிபராக நியமிக்கும் தமது பரிந்துரையை ஜனாதிபதி அரசியலமைப்புச் சபைக்கு அனுப்பினார். அரசியலமைப்புச் சபை அதனை ஆராயும் போது சபையின் நான்கு உறுப்பினர்கள் அதற்குச் சார்பாக வாக்களித்ததாகவும் இருவர் எதிராக வாக்களித்ததாகவும் மேலும் இருவர் வாக்களிப்பைத் தவிர்த்துக் கொண்டதாகவும் அச்சபையின் உறுப்பினரான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பின்னர் தெரிவித்தார்.

சபையின் ஐந்து உறுப்பினர்களின் இணக்கத்தாலேயே அதன் முடிவுகளை எடுக்க வேண்டும். அதேவேளை, ஒரு விடயத்துக்குச் சார்பாகவும் எதிராகவும் சம வாக்குகள் அளிக்கப்பட்டால் மட்டுமே அதன் தவிசாளரான சபாநாயகர் தமது வாக்கை அளிக்க முடியும். ஆனால், அவ்வாறு இல்லாத நிலையில் சபாநாயகர் ஜனாதிபதியின் பரிந்துரைக்கு ஆதரவாக தமது வாக்கை அளித்துள்ளார். அவ்வாறு தான் தேசபந்து பொலிஸ் மா அதிபராகியுள்ளார். எங்கே சட்டத்தின் ஆட்சி?



## வாழ்வியல் தரிசனம்

பொய் எதுவெனப் புரியவேண்டும், மெய் எதுவெனத் தெளிதல் வேண்டும். இந்தக் கருத்தைக் கண்டுகொள்ளாமல் இருப்பவர்கள், எப்படியோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வாழும் வழி எதுவெனச் சொல்லிக் கொடுப்பவர்கள் இன்றியே, நற்குணங்களுடன் வாழும் உத்தமர்களும் இருக்கிறார்கள். தங்களது பெற்றோர்களின் வழிப்படியே இத்தகையவர்கள், தங்களது வாழ்வைச் சீரோடும் சிறப்போடும் அமைத்துக் கொள்கிறார்கள்.

வீடுகள்கூட, தெய்வீகம் நிறைந்திருக்கும் கோவில்களாக அமைய வேண்டும். பெற்றோரின் நடத்தைகள் தூய்மையுடன் இருந்தால், எல்லா இல்லங்களிலும் அதிர்ஷ்டம், நிம்மதி, அறிவு, மேன்மை, ஞானம், பக்தி, பெரியோர் உறவுகள், அன்பு, ஈகை எல்லாமே கைகூடிவரும். எந்தக் கெட்டவர்களின் காற்றுக்கூட அங்கு உள்நுழைய முடியாது பாதுகாக்கப்படும்.

இப்படிப்பட்ட மேன்மைகளுடன் வாழ்ந்த பரம்பரைகளைக் கண்டிருக்கின்றோம். இல்லத்தின் சுற்றாடல்களில் புனிதம் பேணப்படல் வேண்டும். புறச்சுற்றம் அகச்சுற்றத்துக்கு வழிகோலும்.

காலையில் எழுந்து காலைக்கடன் முடித்தவுடன், தெய்வ வழிபாட்டுடன் அன்றைய தினம் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதிகாலைப் பொழுதில் தெளிந்த மனோநிலையில் கற்ற கல்வி நிலைத்து நிற்கும். விளையாட்டு, பொழுதுபோக்கு, வீட்டுவேலை என அனைத்து நல்ல சீரிய பழக்கங்களையும் இளமையில் பழகி வழக்கங்கள் ஆக்கிக்கொள்ளுதல் எங்கேயும் எப்போதும் சிறப்பைத்தரும். நல்ல குடும்பங்களால் பூமி சிறக்கின்றது.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நீர் பிரச்சினைக்கு தீர்வு வேண்டும்

சுற்றுலாப் பயணிகளின் அதிக கவனத்தை ஈர்த்த எல்ல ரயில் நிலையத்தில் நான்கு நாட்களாக நீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது இதற்கு மாற்றாக எல்ல பிரதேச சபைக்கு நீர் வழங்கும் இயந்திரம் ஒன்றிற்கு 4,000 ரூபா வீதம் தற்காலிகமாக நீர் விநியோகிக்கின்ற போதிலும் அது இரண்டு மணித்தியாலங்களுக்குக் கூட போதுமானதாக இல்லை என எல்ல ரயில் நிலையத்தின் நிலைய அதிபர் அசேந்திர திஸாநாயக்க தெரிவித்தார்.

மேலும், நீர் வழங்கல் சபை ஊழியர்கள் நீர் விநியோகத்தை வழமையான நிலைக்குக் கொண்டுவரும் பணியில் ஈடுபட்டிருந்த போதும் அது தோல்வியடைந்ததால் மீண்டும் பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

–ஆரியவன்ச



# தெற்கிற்கான ஒரு பயணம்

யோகேஸ்வரன் ஜோவர்ணன்
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

“மல்லி! கருணாகரலா கெதர என்ன!” (Brother! Please come to the home) இந்த வார்த்தையின் அர்த்தம, அன்று எனக்கு புரியவில்லை. ஆனால், அவர்களுடைய புன்னகை கலந்த முகபாவனை, உடல் மொழி மற்றும் அன்பு கலந்த பேச்சின் தன்மை என்பன, நாங்கள் இப்போதுதான் முதன்முதலில் சந்தித்தோம் என்ற மனநிலையை தோற்றுவிக்கவில்லை.

ஆம்! எனது 25 வருட அனுபவத்தில் பல இடங்களில் பல நிகழ்வுகளுக்கு சென்றிருக்கின்றேன், இதனோடு ஒரு சில கலாசார பரிமாற்ற (Cultural exchange) நிகழ்வுகளிலும் கலந்து, கருத்துக்களை பகிர்ந்து திரும்பியிருக்கின்றேன் ஆனால் இதுபோன்ற ஒரு Home Stay நிகழ்வுக்கு, வாழ்நாளில் முதல் தடவையாக கடந்த 29.11.2023 அன்றே சென்றுள்ளேன்.



முதல் நாள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து அதிகாலை சென்ற நாம், உருகுணைப் பல்கலைக்கழக நிகழ்விற்கு மாலை 3 மணிக்குக் கலந்துகொள்ள வேண்டும். ஆனால், போக்குவரத்தில் ஏற்பட்ட தாமதத்தால் மாலை 7 மணி கடந்த பின்னரே உருகுணை பல்கலைக்குள் நுழைந்தோம். எனினும், எவ்வித சலிப்பும், எவ்வித முகச்சுழிப்புமின்றி அங்குத் துணைவேந்தர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகமே மிகுந்த மகிழ்ச்சியுடன் எமக்காகக் காத்திருந்தனர். அதுமட்டுமன்றி, எமக்குப் பூங்கொத்து வழங்கி இன்முகத்துடன் வரவேற்ற தருணமானது, ‘துக்கத்தில் இருந்தவனுக்கு ஆறுதல் கூறி, ஆற்றுப்படுத்தியது’ போன்ற ஓர் அற்புதவுணர்வை வழங்கியது.



பல வினாக்கள் சிந்தனைகளுடன் சென்ற என்னை, நமது பல்கலைக்கழக இரண்டு நண்பர்களுடன் அஜித் அண்ணாவின் நண்பர் வீடான அஷங்க அண்ணா மற்றும் பூர்ணிமா அக்கா வீட்டில் தங்குவதற்கு வாய்ப்பளித்தனர். எம்மை, மொழி அறியாத, ஊர் அறியாத மற்றும் அப்பல்கலைக்கழகத்தில் கல்வி கற்காத வீட்டில் தங்க வைத்த போது எனக்குள் பல குழப்பங்கள், தயக்கங்கள் எழுந்தன. ஆனால், தங்கி இருந்த அஷங்க அண்ணா மற்றும் பூர்ணிமா அக்கா வீடு தயக்கங்களைத் தூக்கி எறிய வைத்தது. ஆம்! எனது சொந்த வீட்டிலிருந்த மகிழ்ச்சியின், அன்பின் வெளிப்பாடு இங்க இரண்டு மடங்குகளாகக் கிடைத்தது போன்று உணர்ந்தேன். அவர்களுடைய பேச்சு, அனுசரிப்பு, நடத்தை மற்றும் உணவுப் பழக்கம் என பல விடயங்கள் ஆஹா... ஆஹா... சொல்ல வார்த்தைகள் போதாது.

**நான் இருப்பதைப் பார்த்த சில சிங்கள நண்பர்கள், நான் ஏதோ பசியால் இருப்பது போன்று எனக்கு உணவைக் கொண்டு வந்து ஊட்டினார்கள். சற்று கூட எதிர்பார்க்கவில்லை, எனக்கு மறுக்கவும் மனம் வரவில்லை**

இரண்டாம் நாள், பல புதுமுகங்களைச் சந்தித்தோம், கடற்கரையைச் சுத்தம் செய்யச் சென்றோம், மரக்கன்றுகள் நட்டோம், பின்பு ஊதுதுளை எனும் சுற்றுலா தளம் பார்ப்பதற்காகச் சென்றோம். இது ஒரு புதுவிதமான அனுபவம் ஏனெனில் ஒரு பேருந்தில் இரண்டு பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து சென்றோம். அவ்வேளை, பேருந்தில் ஒரு சிங்கள பாடல் ஒளிபரப்பட்ட பின்பு அடுத்து தமிழ்ப் பாடலை ஒளிபரப்புமாறு சிங்கள நண்பர்களே கூறினார்கள். சிங்களம், தமிழ் என அடுத்தடுத்து பாடல்கள் ஒளிபரப்பப்பட்டு ஆடி, பாடி மகிழ்ந்தோம், அவ்வேளை, மாணவர்களின் மனநிலையை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. மாணவர்களின் ஆடல், பாடல், மகிழ்ச்சி என்னையும் வேறு எந்த சிந்தனைக்கும் ஆட்படுத்தாத வண்ணம் மகிழ்ச்சியாக வைத்திருந்தது. எனது இந்த மகிழ்ச்சிக்கு மாணவர்களின் ஈடுபாடு ஒரு காரணமாக இருந்ததோடு, அர்ஜூனா Sir மற்றுமொரு மிக முக்கியமான காரணமாக இருந்தார். உண்மையில் இவரைப் போல் ஒரு மனிதனை என் வாழ்நாளில் காணவில்லை. ஏனெனில், அவருடைய பேச்சு, மொழி, நடத்தைகள் ஏனோ தெரியவில்லை என்னைக் கவர்ந்தது. அன்றிலிருந்து இன்று வரை அர்ஜுன் Sir எனது நினைவில் அழியாமல் உள்ளார்.

இறுதி நாளுக்கு முன்பு கலாசார நிகழ்வு. இது ஒரு நிகழ்வல்ல, எனது முற்கற்பிதங்களை(Stereotype) உடைத்த நாள். கலாசார நிகழ்வு நிறைவுற்று கலையரங்கத்திற்கு வெளியே வந்து அமர்ந்து இருக்கின்றேன். நான் இருப்பதைப் பார்த்த சில சிங்கள நண்பர்கள், நான் ஏதோ பசியால் இருப்பது போன்று எனக்கு உணவைக் கொண்டு வந்து ஊட்டினார்கள். சற்று கூட எதிர்பார்க்கவில்லை, எனக்கு மறுக்கவும் மனம் வரவில்லை, நான் பசியாக இருந்தேன் ஆனால் அவர்களின் அன்பு கலந்த வார்த்தைகள் பசியை மறக்கச் செய்தன. இருந்தும் என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை, இவர்களுக்கு ஏதாவது நினைவுப் பொருட்களாக வழங்க வேண்டும் என எண்ணினேன், உடனடியாக... என்னிடமிருந்து உங்களுக்கு என்ன வேண்டும்?” என வினாவிய போது, எமது கலாசார உடையான வேஷ்டியைக் கேட்டனர், எவ்வித மறுப்புமின்றி என்னிடமிருந்த புது வேஷ்டியை மகிழ்ச்சியோடு அன்பளிப்பாக வழங்கினேன். வழங்கிய மட்டுமல்ல அவர்கள் எவ்வாறு இதைக் கட்டுவது என கேட்டபோது அதனைக் கட்டுவதற்கு எனது நண்பர்களுடன் சொல்லிக் கொடுத்தேன், அவர்களும் வேஷ்டியைக் கட்டி, மிகுந்த மகிழ்ச்சியுடன் புகைப்படங்களும் எடுத்துக்கொண்டனர்.

இறுதி நாள் நிகழ்வின் பின் உருகுனை பல்கலையை விட்டு வெளிவருவதற்கு யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மனமே இல்லை இருந்தும் வரவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் வெளிவந்தோம். இவ்வாறு பல சுவாரசியமான விடயங்கள் இடம்பெற்றன. எவற்றைக் கூறுவது என தவிக்கின்றேன். நடந்த விடயங்கள், அனுபவங்கள் மற்றும் மனதிலுள்ள நினைவுகள் அனைத்தையுமே ஒரு கட்டுரையிலோ அல்லது ஆக்கத்திலோ எழுதி முடித்திடவோ அல்லது கூறிவிடவோ முடியாது.








# நூல் வெளியீட்டு விழா

எஸ்.சதீஷ்

பொகவந்தலாவ- கொட்டியாகலை கல்வி சங்கத்தின் ஓராண்டு பூர்த்தி விழாவினை முன்னிட்டு கௌரவிப்பு நிகழ்வும் நூல் வெளியீட்டு விழாவும் பொகவந்தலாவ ஸ்ரீ தண்டாயுதபாணி ஆலய கதிரேசன்

மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்றது.

இதேவேளை, புலமைப்பரீசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

மாணவர்கள், உயர்தரத்திற்குத் தெரிவான மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிய அனைத்து மாணவர்களுக்கும் நினைவு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு. ஆசிரியர்கள், அதிபருக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.



மேலும், இந்நிகழ்வில் பொகவந்தலாவ, கொட்டியாகலை கீழ் பிரிவு, மத்திய பிரிவு, மேல் பிரிவு, கே.எம்.சி ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களே கௌரவிக்கப்பட்டனர்.



# கைநூல் கையளிப்பு




பாறுக் ஷிஹான்

‘நெருக்கடி கலை முகாமைத்துவம்’ என்ற வழிகாட்டி கைநூல் கையளிப்பு நிகழ்வு, சாய்ந்தமருது குவாஷி நீதிமன்ற கட்டடத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, ஓய்வு பெற்ற உதவி கூட்டுறவு ஆணையாளரும் சாய்ந்தமருது குவாஷி நீதி மன்றத்தின் நீதிபதியுமான அஹமது லெவ்வை ஆதம்பாவா சாய்ந்தமருது பெரும் குற்றப் பிரிவின் பொறுப்பதிகாரியும் உப- பொலிஸ் பரிசோதகருமான ஏ.எல்.எம். றஊப்பிற்கு வழங்கி வைத்துள்ளார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது குவாஷி நீதிமன்ற உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# “முதற்குடி மகன்” நூல் வெளியீடு




எம்.யூ.எம்.சனூன்



மறைந்த முன்னாள் கால் நடை வளத்துறை பிரதி அமைச்சரும், புத்தளம் நகர பிதாவும், கவிஞருமான மர்ஹூம் கே.ஏ. பாயிஸின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களின் தொகுப்பு நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அவரின் பிரத்தியேக செயலாளரான, எழுத்தாளர் எம்.எஸ்.அப்பாஸ் “முதற்குடி மகன்” எனும் பெயரில் எழுதியுள்ளார். அந்த நூல் புத்தளம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை (07) வெளியிட்டு வைக்கப்பட்டது.

இங்கிலாந்து

# குழந்தைக்கு ஏற்பட்டுள்ள விநோத பாதிப்பு

மூன்று வயது குழந்தை ஒன்று கண்ணாடி, கட்டில், சோபாவை சாப்பிடும் பழக்கத்தை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள வேல்ஸ் பிளாக்வுட் நகரைச் சேர்ந்த ஸ்டேஷி ஹெர்ன் என்ற பெண்ணுக்கு 3 வயதில் வின்டர் என்ற பெண் குழந்தை உள்ளது. இந்தக் குழந்தை வீட்டில் விளையாடும் போது தரையில் கிடந்த பொருட்களை எல்லாம்



வாயில் போடுவதும், அவற்றை சாப்பிடுவதுமாக இருந்துள்ளது.

குழந்தைகளுக்கு இதுபோன்ற பழக்கம் வழக்கமானது என்பதால் நாளடைவில் இது சரியாகி விடும் என அவரது தாய் கருதியுள்ளார்.

ஆனால், போகப்போக சோபாவில் உள்ள பஞ்சு, போட்டோ பிரேம், கண்ணாடி துண்டுகள், கட்டிலில் உள்ள மரக்கட்டைகள் என அனைத்து பொருட்களையும் குழந்தை சாப்பிட தொடங்கியதால் ஸ்டேஷி அதிர்ச்சியடைந்தார்.

இதனால் குழந்தை தூங்கும் நேரத்தை தவிர மற்ற நேரங்களில் அதனை கண்காணிக்கும் நிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து குழந்தையை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று பரிசோதனை செய்தபோது அந்த குழந்தைக்கு ஓட்டிசம் (Autism) பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பிரித்தானியா

கேட் இறந்து விட்டதாக பரவிய

# போலி செய்தியால் பரபரப்பு

பிரித்தானியத் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறப்பது போன்ற புகைப்படம் வெளியானதால் இளவரசி கேட் இறந்து விட்டதாக விஷமிகள் சிலர் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

பிரித்தானிய இளவரசி கேட் தொடர்பில் பல சர்ச்சையான கருத்துக்கள் அண்மைய நாட்களாகப் பரவி வந்த நிலையில், தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறப்பது போன்ற புகைப்படம் வெளியாகி மேலும் அச்சத்தை ஏற்படுத்தியதாகப் பிரித்தானிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இளவரசர் சார்லஸ், மன்னரானதைத் தொடர்ந்து, இளவரசர் வில்லியமுக்கு வேல்ஸ் இளவரசர் பட்டம் வழங்கப்பட்டது.

கேட், வேல்ஸ் இளவரசியாகிப் பாதுகாப்புப் பிரிவில் பொறுப்பொன்றை வகிக்கிறார்.



இந்நிலையில், பாதுகாவலர்களின் அணிவகுப்பு நடந்தபோது அதில் இளவரசி கேட் கலந்து கொள்ளவில்லை. அதேசமயம் இளவரசி அங்கு இல்லாதபோதும், வீரர்கள் அவருக்கு மரியாதை செலுத்தும் காட்சிகள் வெளியாகியுள்ளன. குறித்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளாததால், இளவரசி கேட் இறந்துவிட்டதாகச் செய்திகள் வெளியாகின. தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறந்ததையும் இளவரசி அணிவகுப்பில் கலந்து கொள்ளாததையும் இணைத்து, இளவரசி கேட் இறந்து விட்டார். அதனால் தான் பிரித்தானியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கின்றது என்று சிலர் வதந்திகளைப் பரவவிட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா

# ஸ்ட்ரோபெர்ரி பழத்தால் உயிரிழந்த சிறுவன்

ஸ்ட்ரோபெர்ரி பழத்தை சாப்பிட்ட 8 வயது சிறுவன் ஒவ்வாமை (அலர்ஜி) ஏற்பட்டு உயிரிழந்த சம்பவம் பலரையும் கவலைக்குள்ளாக்கி உள்ளது.

அமெரிக்காவின் கென்டக்கி மாகாணத்தில் உள்ள மேடிசன்வில்லி என்ற நகரின் நோர்த் ஹாப்கின்ஸ் பள்ளியில் மார்ச் 14ஆம் திகதி இரவு ஒரு நிதி திரட்டும் நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

நிகழ்ச்சிக்கு பெற்றோருடன் சென்றிருந்த அந்த சிறுவன் பல ஸ்ட்ரோபெர்ரி பழங்களைச் சாப்பிட்டுள்ளான் என சிறுவனின் பெற்றோர் விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

நிகழ்ச்சி நடந்த மறுநாள் காலை அந்த சிறுவன் பேச்சு மூச்சற்று வீட்டில் கிடந்துள்ளான். ஸ்ட்ரோபெர்ரி சாப்பிட்டு சிறிது நேரத்தில் அவனுக்கு அரிப்பு போன்ற ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது.

நிலைமை மோசமானதைத் தொடர்ந்து, இரவு 10.30 மணியளவில் அருகிலிருந்த மருத்துவமனைக்குச் சிகிச்சைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

சிகிச்சை முடிந்து சிறுவன் வீட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளான். அடுத்த நாள் காலையில் பள்ளி செல்வதற்காகச் சிறுவனை எழுப்பியபோது அவன் பேச்சுமூச்சற்று இருந்துள்ளான்.

அவன் உயிரிழந்ததை அறிந்த பெற்றோர் அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்துள்ளனர். சிறுவனின் மரணத்திற்குப் பின் ஹாப்கின்ஸ் கவுண்டி மருத்துவத்துறை மேற்கொண்ட உடற்கூராய்வில் சிறுவன் ஒவ்வாமையால் உயிரிழந்தான் எனத் தெரியவந்தது.

கர்நாடகா

ஆசிரியை திட்டியதால்

# மனமுடைந்து மாணவி



கர்நாடகாவில் ஆசிரியை திட்டியதால், மாணவி ஒருவர் மனமுடைந்து தன்னுயிரை மாய்த்துக்கொண்ட கொண்ட சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக மாநிலம் கடம்பூரில் அரச பாடசாலையில் பணிபுரிந்து வரும் ஆசிரியை தான் கொண்டுவந்திருந்த 2,000 ரூபாய் பணம் காணாமல் போனதையடுத்து சில மாணவிகள் மீது சந்தேகம் கொண்டுள்ளார்.

அதன்பேரில் நான்கு மாணவிகளை ஒரு தனி அறைக்கு அழைத்துச் சென்று தலைமை ஆசிரியர், அறிவியல் ஆசிரியர் ஆகியோர் அவர்களின் உடைகளைக் களைந்து சோதனை செய்துள்ளனர். அத்துடன், அங்குள்ள கோவிலுக்கு மாணவி ஒருவரை அழைத்துச் சென்று, பணத்தை எடுக்கவில்லை என சத்தியம் செய்ய வைத்துள்ளனர்.

இதனால் மனமுடைந்து போன அம்மாணவி அடுத்தடுத்த நாட்களில் பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருந்துள்ளார்.

இந்நிலையில், சில தினங்களுக்கு முன்னர் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தன்னுயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

புதுச்சேரி

# பா.ஜ.க வேட்பாளர் தமிழிசை?



புதுச்சேரி ஆளுநர் பதவியை இராஜினாமா செய்த தமிழிசை சௌந்தரராஜன், பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) தென்சென்னை தொகுதியில் வேட்பாளராக களமிறக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழிசை சௌந்தரராஜனின் இராஜினாமா ஏற்கப்பட்டுள்ள நிலையில், அப்பதவிக்கு சி.பி.இராதாகிருஷ்ணன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இராஜினாமா குறித்து பேசிய தமிழிசை, 'தீவிரமான மக்கள் பணிக்கு திரும்ப வேண்டும் என்பதற்காகத்தான் நான் மனமுவந்து இராஜினாமா செய்துள்ளேன். தெலுங்கானா, புதுச்சேரி மக்கள் என் மீது காட்டிய அன்பிற்கு நான் நன்றியுடையவளாக இருப்பேன்" என்று கூறியுள்ளார்.

தமிழ்நாடு

# ஓ.பி.எஸ்க்கு நிரந்தர தடை



அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ.தி.மு.க) பெயர், கொடி, சின்னம், கடிததலைப்பு அகியவற்றை பயன்படுத்த ஓ.பன்னீர்செல்வத்திற்கு (ஓ.பி.எஸ்) நிரந்தர தடைவிதித்து சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கட்சியிலிருந்து நீக்கப்பட்ட ஓ.பன்னீர்செல்வத்துக்கு அவற்றைப் பயன்படுத்த தடைவிதிக்கக் கோரி பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி சார்பில் கடந்த ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. மனுவை விசாரித்த நீதிபதி, வழக்கில் பதிலளிக்க ஓ.பி.எஸ். தாமதப்படுத்துவதை சுட்டிக்காட்டி, அவற்றைப் பயன்படுத்த ஓ.பி.எஸ்க்கு இடைக்கால தடை விதத்து உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், இடைக்கால தடைக்காலம் முடிந்த நிலையில், தடையை நீட்டிக்க வேண்டாம் எனவும், வழக்கில் தீர்ப்பளிக்கும் வரை அவற்றை பயன்படுத்த மாட்டேன் எனவும் ஓ.பி. எஸ் தரப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களும் மார்ச் 12ஆம் திகதி நிறைவடைந்த நிலையில் இடைக்கால மனுக்கள் மீதான தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் நீதிபதி தள்ளிவைத்திருந்தார்.

பங்களாதேஷுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான

# இலங்கை குழாமில் ஹசரங்க



பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இலங்கைக் குழாமில் வனிடு ஹசரங்க இடம்பெற்றுள்ளார். கடந்தாண்டு அறிவித்த டெஸ்ட் போட்டிகளிலிருந்தான ஓய்வை மீளப் பெற்றே அவர் இக்குழாமில் இடம்பெற்றுள்ளார்.

குழாம்: தனஞ்சய டி சில்வா (அணித்தலைவர்), குசல் மெண்டிஸ் (உப அணித்தலைவர்), திமுத் கருணாரத்ன, நிஷான் மதுஷ்க, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், சதீர சமரவிக்கிரம, கமிந்து மெண்டிஸ், லஹிரு உதார, வனிடு ஹசரங்க, பிரபாத் ஜெயசூரிய, ரமேஷ் மெண்டிஸ், நிஷான் பீரிஸ், கசுன் ராஜித, விஷ்வ பெர்ணாண்டோ, லஹிரு குமார, சாமிக குணசேகர.



இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டுக்கான

# பங்களாதேஷ் குழாமில் லிட்டன் தாஸ்

இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டுக்கான பங்களாதேஷ் குழாமில் லிட்டன் தாஸ் இடம்பெற்றுள்ளார்.

அண்மைய கால மோசமான பெறுபேறுகள் காரணமாக இலங்கைக்கெதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டிக்கான குழாமிலிருந்து தாஸ் நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பங்களாதேஷ் இறுதியாக விளையாடிய நியூசிலாந்துக்கெதிரான தொடருக்கான குழாமில் இடம்பெற்றிருந்த விக்கெட் காப்பாளர் நுருல் ஹஸன், வேகப்பந்துவீச்சாளர் ஹஸன் மஹ்மூட் ஆகியோர் இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டுக்கான குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ (அணித்தலைவர்), ஸகிர் ஹஸன், மஹ்முடுல் ஹஸன் ஜோய், ஷட்மன் இஸ்லாம், லிட்டன் தாஸ், மொமினுல் ஹக், முஷ்பிக்கூர் ரஹீம், ஷடாட் ஹொஸைன், மெஹிடி ஹஸன் மிராஸ், நயீம் ஹஸன், தஜியுல் இஸ்லாம், ஷொரிஃபுல் இஸ்லாம், சைட் காலிட் அஹ்மட், முஷ்ஃபிக் ஹஸன், நஹிட் ரானா.

பி.எஸ்.எல்: மூன்றாவது தடவையாக

# இஸ்லாமபாத் யுனைட்டெட் சம்பியன்




பாகிஸ்தானின் உள்ளூர் இருபதுக்கு-20 தொடரான பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் (பி.எஸ்.எல்) இஸ்லாமபபாத் யுனைட்டெட் சம்பியனானது.

கராச்சியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற முல்தான் சுல்தான்ஸுடனான போட்டியில் இறுதிப் பந்தில் வென்றே மூன்றாவது தடவையாக இஸ்லாமபாத் யுனைட்டெட் சம்பியனானது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: முல்தான் சுல்தான்ஸ்

முல்தான் சுல்தான்ஸ்: 159/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: உஸ்மான் கான் 57 (40), இஃப்திஹார் அஹ்மட் ஆ.இ 32 (20), மொஹமட் றிஸ்வான் 26 (26) ஓட்டங்கள். பந்துவீச்சு: இமாட் வசீம் 5/23 [4], ஷடாப் கான் 3/32 [4], தைமல் மில்ஸ் 0/24 [4], நசீம் ஷா 0/25 [4])

இஸ்லாமபாத் யுனைட்டெட்: 163/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மார்டின் கப்தில் 50 (32), அஸாம் கான் 30 (22), இமாட் வஸீம் ஆ.இ 19 (17), நசீம் ஷா 17 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: குஷ்டில் ஷா 2/21 [4], இஃப்திஹார் அஹ்மட் 2/19 [3], டேவிட் வில்லி 1/15 [2], மொஹமட் அலி 1/32 [4])

போட்டியின் நாயகன்: இமாட் வஸீம்

தொடரின் நாயகன்: ஷடாப் கான்

செல்சியின் முகாமையாளர்

# சிமோனே இன்ஸாகி

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியானது, தமது தற்போதைய முகாமையாளர் மௌரிசியோ பொச்செட்டினோவுக்குப் பிரதியீடாக இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனின் பயிற்சியாளரான சிமோனே இன்ஸாகியை அடையாளங்கண்டுள்ளது.

மிலனுடன் இன்னும் ஓராண்டு ஒப்பந்தத்தை இன்ஸாகி கொண்டிருக்கின்றாரென்பது குறிப்பிடத்தக்கது.






# டொட்டென்ஹாமில் தொடரப் போகும் வேர்னர்?

ஜேர்மனிய பெண்டெலிஸ்கா (Bundesliga) கால்பந்தாட்டக் கழகமான ஆர்.பி. லெய்ப்ஸிக்கிலிருந்து கடனடிப்படையில் கைச்சாத்திட்ட முன்கள வீரர் திமோ வேர்னரின் நகர்வை நிரந்தரமாக்குவது குறித்து இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் கருத்திற் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2026ஆம் ஆண்டு வரையில் லெய்ப்ஸிக்குடன் 28 வயதான வேர்னர் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ளபோதும் கடன் ஒப்பந்தத்திலுள்ள சரத்தொன்று காரணமாக 15 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களுக்கு பருவகால முடிவில் வேர்னரை டொட்டென்ஹாம் கைச்சாத்திட முடியுமென்பது குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 20, மார்ச் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.